**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**
**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. வா.வே.சு ஐயரின் குளத்தங்கரை அரசமரம் என்ற கதையில் அமைந்துள்ள நோக்கு நிலை யாது?
2. புதுமைப்பித்தனின் இயற்பெயர் யாது?
3. சாகித்திய அக்காதமி பரிசு பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் யார்?
4. மாட்டுத் தொழுவம் கதையின் கரு யாது?
5. விளம்பர மோகத்திற்கு அடிமையாகும் பெண்ணைப் பற்றிக் கூறும் சிறுகதை யாது?
6. இல்லாதவர்கள் உழைப்பைச் சுரண்டும் அவலம் எந்தச் சிறுகதையில் பேசப்படுகிறது?
7. உளவியல் நோக்கில் எழுதப்பட்ட சிறுகதை எது?
8. சமையலறையில் பெண்கள் உழைப்புச் சுரண்டப்படுதல் குறித்த சிறுகதை யாது?
9. தமிழ் நாவலின் தந்தை யார்?
10. தமிழ் நாட்டின் ஜேன் ஆஸ்டின் என்று போற்றப்படுபவர் யார்?
11. நாரண. துரைக்கண்ணன் எழுதிய தழுவல் புதினம் எது?
12. சுந்தர முதலியாரின் மகள் யார்?
13. முதன்முதலாக இரயிலைப் பார்த்த மக்கள் என்ன செய்தார்கள்?
14. பொன்னீலனின் தாயார் எழுதிய நாவலின் பெயர் என்ன?
15. என் இனிய இயந்திரா எத்தகைய புதினம்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
2. விந்தனின் வித்தியாசமான உவமை இரண்டைக் கூறுக.
3. கு. அழகிரிசாமியின் பிறப்பும் வளர்ப்பும் குறித்து எழுதுக.
4. தி.ஜா.வின் சிறுகதைகள் பற்றி இரா. தண்டாயுதம் குறிப்பிடுவது என்ன?
5. புதினத்தில் இடம்பெறும் கருப்பொருள் குறித்து எழுதுக.
6. கல்கியின் நகைச்சுவை நடைபற்றி எழுதுக.
7. இராஜம் கிருஷ்ணனின் நாவல் படைப்புத்திறனில் அவருடைய எழுத்து நடை பற்றி எழுதுக.
8. புதியமொட்டுகள் நாவலில் கல்வி நிலையத்தின் நிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
9.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சிறுகதை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கை விளக்குக.

(அல்லது)

(ஆ) புதுமைப்பித்தனின் சமுதாயப் பார்வை குறித்து கட்டுரை தருக.

2. (அ) கதைக்கருவும் களமும் என்ற தலைப்பில் தி.ஜா. கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிறுகதை நோக்கும் போக்கும் குறித்து சு. சமுத்திரம் யாது கூறுகிறார்?

3. (அ) வரலாற்றுப் புதினங்கள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் பெண் பாத்திரங்கள் குறித்து விளக்குக.

*** 